**16. அடகுவைத்த கதை**

சுந்தரமூர்த்தியடிகள் கொங்குவளநாட்டில் சிவப்பதி வழிபாடு செய்துகொண்டிருந்தார். திருவெஞ்சமாக்கூடல் என்னும் சிவப்பதியை நோக்கி அவர்வந்துகொண்டிருக்கும் போது, திருவெஞ்சமாக்கூடலில் எழுந்தருளிய சிவபெரு மான் சுந்தரமூர்த்தியடிகளுக்குப்பொன் கொடுக்கத் திருவுளங்கொண்டார். ஓர் அந்தண வடிவுகொண்டு மூத்த பிள்ளையார் முருகக்கடவுள்ஆகியோர்களைக் குழந்தைக ளாக்கினார். தம்மிடத்துப் பேரன்புகொண்டு விளங்கும் ஓர் ஆய்மகளிடஞ்சென்றார். இக்குழந்தைகளை ஈடாக வைத் துக்கொண்டு பொன் தரவேண்டுமென்று கேட்டார். அன் பினும்அகவையினும் முதிர்ந்து விளங்கிய அவ்வாய்மகளும் அவ்வாறே இறைவன் விரும்பிய அளவு பொருள் வழங்கினாள். அதனைச் சிவபெருமான் தம் முன்பு வந்து பதிகம் யாடிய சுந்தரமூர்த்தியடிகட்கு வழங்கினார். திருவெஞ்ச மாக்கூடற்புராணக் கதையாகிய இது கொங்குமண்டல சதகச் செய்யுளுக்கு மேற்கோளாகக்காட்டப்பட்டுள்ளது. "கிழவே தியவடி வாகி விருத்தையைக் கிட்டியெந்தன் அழகாகு மக்க ளடகுகொண்டம்பொனருடி யென்றேற் றெழுகாத லால் தமிழ் பாடிய சுந்தரற் கீந்தவொரு மழுவேந் தியவிகிர் தேசுரன்வாழ்கொங்கு மண்டலமே.



(இறைவன் திருவிளையாடல்)

(கொங்குமண்டல சதகம்)